**<u>தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் லிமிடெட்</u>**
**(டாப்கோபெட்) AFF/MDS–1**
**<u>“டாப்போபெட்” இணையத்தின் சில்லரை மீன் விற்பனை அங்காடிகளை உரிமம் அடிப்படையில் செயல்படுத்துதல்</u>**
**<u>விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்</u>**

<u>ந.க. எண். 1005/ஆ/2020</u> <u>நாள்18/12/2020</u>

1. ‘‘டாப்கோபெட்’’ இணையத்தின் உரிமத்தின் அடிப்படையில் சில்லரை மீன் விற்பனை அங்காடிகளை ஏற்று நடத்திட ஆர்வமுள்ள மீனவர் கூட்டுறவு சங்கங்கள்/மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள்/மாவட்ட கூட்டுறவு சம்மேளனங்கள் / கூட்டுப் பொறுப்புக் குழுக்கள், மீனவர் கூட்டுறவு சுய உதவிக் குழுக்கள் / மீனவ மகளிர் கூட்டுறவு சுய உதவிக் குழுக்கள் / தனி நபர்கள் / மீன் விவசாயிகள் / தொழில்முனைவோர்கள் தங்களுடைய பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அடியிற்குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பி வைத்திட வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் லிமிடெட்,
எண். 571, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்துறைக்கான ஒருங்கிணைந்த
அலுவலகக் கட்டிட வளாகம் (நான்காவது தளம்),
நந்தனம், சென்னை 600 035.
தொலைபேசி எண். 044/29510398

2. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பமானது அதற்குத் தேவையான ஆவணங்களான

(அ) மீனவர் கூட்டுறவு சங்கம் / மீனவ மகளிர் கூட்டுறவு சங்கம் / மாவட்ட மீனவர் கூட்டுறவு சம்மேளனம் / கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் / சுய உதவிக் குழுக்கள் பதிவு ஆவணங்கள், சமீபத்திய மூன்று ஆண்டுகளுக்குரிய தணிக்கை அறிக்கை நகல்கள் மற்றும் ஆஸ்திப் பொறுப்பு பட்டியலின் நகல்களுடன் டாப்கோபெட் இணையத்தின் உரிமம் பெற்று சில்லரை மீன் விற்பனை அங்காடிகளை ஏற்று நடத்திட உரிய நிர்வாகக்குழு கூட்டத் தீர்மானத்தின் நகல் ஆகியவற்றினை இணைத்தனுப்ப வேண்டும்.

(ஆ) தனி நபர்களைப் பொருத்த வரையிலும் அவர்களது ஆளறிச் சான்று, முகவரிச் சான்று, மீனவர் / மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கத்தின் பெயர், உறுப்பினர் எண் விபரங்கள், ஆதார் அடையாள எண்., வங்கி கணக்கு வரவு செலவு பட்டியல் ஆகிய ஆவணங்களுடன் புகைப்படம் ஒன்றினையும் விண்ணப்பத்துடன் இணைத்திட வேண்டும். இணையத்தில் பெறப்படும் விண்ணப்பங்கள் அனைத்தையும் இணைய மேலாண்மை இயக்குநரால் நியமிக்கப்படும் ஒரு பரிசீலனைக் குழுவால் கூர்ந்தாய்வு செய்யப்படும்.

3. தனி நபரால் 200 சதுர அடிக்கு குறையாத பரப்பளவில் மீன் சில்லரை விற்பனைக்காக காலி இடம் / அங்காடி கண்டறியப்பட வேண்டும். தேர்வு செய்யப்பட்ட இடத்தில் / அங்காடியில் நீர் விநியோக அமைப்பு, கழிவு நீர் அகற்றுவதற்கான வசதிகள், தூய்மையான சுற்றுப்புற சூழ்நிலை ஆகியவை குறித்து இணையத்தால் ஆய்வு செய்யப்படும். நடமாடும் மீன்விற்பனை அங்காடி வாகனத்தைப் பொருத்த வரையில் மீன்களை பாதுகாப்பான முறையில் இருப்பு செய்வதற்காக பாதுகாப்பிற்கான குளிர் காப்பு பெட்டி அமைக்கப்பட்டிருக்க வேண்டும் மற்றும் விற்பனைக்கான மீன்களைக் காட்சிப்படுத்தும் பெட்டி ஒன்றும் நிறுவப்பட்டிருக்க வேண்டும். வாகனத்திற்குரிய பதிவுச் சான்றிதழ் நடப்பில் இருப்பதுடன், நாளது தேதி வரையிலான செல்லுபடியாகும் தகுதிச் சான்றிதழும், வாகன காப்பீட்டுடன் மேலும் மூன்றாம் நபருக்கான விபத்துக் காப்பீடும் செய்யப்பட்டிருக்க வேண்டும்.
4. தேர்வு செய்யப்பட்ட அங்காடி/நடமாடும் விற்பனை வாகனமானது இணையத்தால் தகுதியானது எனக் கண்டறியப்பட்டவுடன், உரிமம் கோருபவரால் தொடர்புடைய சொத்து/வாகன உரிமையாளருடன் குறைந்தபட்சம் ஓர் ஆண்டிற்கு கடை வாடகை/வாகன வாடகை தொடர்பான ஒரு வாடகை ஒப்பந்தம், நிர்ணயிக்கப்பட்ட வாடகை உரிமம் கோருபவர் அளவிலேயே செலுத்தப்படும் என்ற நிபந்தனையுடன் மேற்கொள்ளப்பட்டு, அவ்வாடகை ஒப்பந்த நகல் இணையத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
5. இணையத்தால் தற்காலிகமான முறையில் தேர்ந்தெடுக்கப்படும் பயனாளி, அவரால்/அவர்களால் கண்டறியப்பட்ட அங்காடி/நடமாடும் விற்பனை வாகனத்தின் வழியே ‘‘டாப்கோபெட்‘‘ இணையத்தின் உரிமத்தின் அடிப்படையில் சில்லரை மீன் விற்பனை மேற்கொள்வதற்கு தற்காலிக உரிமம் வழங்கி நியமிக்கப்படுவார்கள்.
6. சுத்தமான சுகாதார சூழ்நிலையில் சச்சரவு அற்ற முறையில் சில்லரை மீன் விற்பனையினை மேற்கொள்ளத் தேவையான அங்காடிப் பணியாளர்களான விற்பனையாளர், விற்பனை உதவியாளர் மற்றும் மீன்வெட்டுவபர் போன்ற பணியாளர்களை உரிமம் வழங்கப்படுவர் அவரது சொந்த முறையில் அவரது சொந்தச் செலவில் நியமனம் செய்து கொள்ள வேண்டும்.
7. விற்பனை உரிமம் வழங்கப்படுபவர், நியமன ஆணை வழங்கப்பட்டவுடன், இணையத்தில் ரூ. 50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) தொகையினை ஒரு பாதுகாப்பு நிதியாக உடன் செலுத்திட வேண்டும். இந்தப் பாதுகாப்பு நிதிக்கு இணையத்தால் எவ்விதமான வட்டியும் வழங்கப்பட மாட்டாது.

8. சில்லரை மீன்விற்பனை உரிமம் வழங்கப்படுபவருக்கு ''டாப்கோபெட்'' இணையமானது, விற்பனை மேற்கொள்ளத் தேவைப்படும் மீன்களை, இணையத்தின் சொந்த வாகனத்தின் மூலம் விற்பனை அங்காடிக்கு தினசரி வழங்கப்படும்.

உரிமம் பெற்றவர் தினசரி பெறும் மீன்களுக்கான தொகையினை இணையத்திற்கு உடன் அன்றைய தினமே பெறப்பட்ட மீன்களுக்குரிய மதிப்புத் தொகையினை தவறாமல் நிகழ்விடத்திலேயே செலுத்திட வேண்டும். மீன்கள் மற்றும் நொறுக்கப்பட்ட பனிக்கட்டி **1 : 1** என்ற விகிதத்தில் கலந்து இருப்பு செய்யப்படவேண்டும். நொறுக்கப்பட்ட பனிக்கட்டியை உரிமம் பெற்றவர் ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

உரிமம் பெற்றவர் சில்லரை மீன் விற்பனையுடன் அல்லாமல் மேலும் இணையத்தால் வழங்கப்படும் மதிப்புக் கூட்டப்பட்ட மீன் பொருட்களையும், 20 சதவீதம் கமிஷன் அடிப்படையில் விற்பனை செய்திட வேண்டும்.

9. மீன்கள் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட மீன் பொருட்களுக்கான தினசரி அதிகபட்ச சில்லரை விற்பனை விலையை ''டாப்கோபெட்'' இணையத்தின் அளவில் நிர்ணயம் செய்து தெரிவிக்கப்படும் விலையின் அடிப்படையில் மட்டுமே மீன்களும் ஏனைய பொருட்களும் விற்பனை செய்யப்பட வேண்டும்.

10. உரிமம் பெற்றவர் விற்பனைக்குரிய ரசீதுகளின் நகல்களை அல்லது ''டாப்கோபெட்'' மென்பொருள் பொருத்தப்பட்ட இயந்திரம், கணினி வழியான விற்பனைப் பட்டியலினை மாதம் ஒருமுறை டாப்கோபெட் நிறுவனத்திற்கு கட்டாயம் வழங்கிட வேண்டும்.

11. விற்பனைக்காக உரிமம் பெற்றவரிடம் மீன்களை வழங்கி அதனைப் பெற்றுக் கொண்ட பின்னர், எந்த காரணத்தின் அடிப்படையிலும் கெட்டுப்போன மீன்கள் / மீன்கள் திருப்பம் என்ற வகையில் எந்தக் கோரிக்கையினையும் உரிமம் பெற்றவர் இணையத்திடம் எழுப்பக்கூடாது.

12. அடியிற்குறிப்பிட்டுள்ள பட்டியலில் கண்டுள்ளவாறு உரிமதாரர் மாதாந்திர சில்லரை மீன் விற்பனை இலக்கினை எய்திட வேண்டும். தொடர்ந்து ஆறு மாத காலத்திற்கு விற்பனை இலக்கினை எய்தப்படவில்லை என்றால், மீன் சில்லரை விற்பனைக்கான உரிமத்தினை ரத்து செய்வது அல்லது இணையத்தின் அளவில் உரிமதாரர் மீது அபராதம் விதிப்பது போன்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கு ' டாப்கோபெட் ' இணையத்திற்கு உரிமை உண்டு.

(கிலோவில்)

| வ.எண் | மாதம் | குறைந்தபட்ச விற்பனை அளவு |
|---|---|---|
| 1. | முதல் மாதம் | 500 கிலோ |
| 2. | இரண்டாம் மாதம் | 1000 கிலோ |
| 3. | மூன்றாம் மாதம் | 1500 கிலோ |

13. சில்லரை மீன்விற்பனை உரிமம் பெற்றவர் விற்பனை அங்காடியினை மிகவும் சுகாதாரமாகவும், தூய்மையாகவும் பராமரித்து வருவதுடன், திடக்கழிவுகளை அகற்றுதல் தொடர்பாக உள்ளாட்சி நிறுவனப் புகார்களுக்கு இடம் தராமல் மேற்கொண்டு வரவேண்டும்.
14. சில்லரை மீன்விற்பனைக்கான உரிமம் வழங்கப்படுபவர் அவரது சொந்தச் செலவில், நீதித்துறை அல்லாத முத்திரைத் தாளில் இணையத்துடன் ஒப்பந்தம் ஒன்றினை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். இந்த ஒப்பந்தமானது ஆண்டிற்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட வேண்டும்.
15. டாப்கோபெட் இணையத்தின் மேலாண்மை இயக்குநருக்கு சில்லரை மீன் விற்பனை உரிமம் வழங்கக் கோரும் எந்தவொரு விண்ணப்பத்தினையும் ஏற்பதற்கோ அல்லது நிராகரிப்பதற்கோ அனைத்து உரிமைகளையும் பெற்றவரராவார்.
16. தொடர்புடைய அலுவலர்களிடமிருந்து தேவையான அனைத்து சட்டப்பூர்வமான அனுமதியினையும் மற்றும் உரிமங்களையும், மீன் விற்பனைக்கான உரிமம் பெற்றவர் அளவிலேயே பெற்றிடவேண்டும்.
17. விற்பனை உரிமதாரர் ஒப்பந்த ஷரத்துக்களுடன், அரசால் கூடுதலாக ஏற்படுத்தப்படும் சட்டம், விதிகள் மற்றும் ஆணைகளின்படி மீன் விற்பனைக்கான கூடுதல் நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.
18. விற்பனை அங்காடியின் உட்புற மற்றும் வெளிப்புற வடிவமைப்பு, அலங்காரப்படுத்துதல், அடையாளப்பலகை அமைத்தல் போன்றவற்றினை இணையத்தின் அளவில் நிர்ணயிக்கப்படும் வரையறைகளின்படி உரிமம் பெற்றவர் அச்செலவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

19. இணையத்தால் விநியோகிக்கப்படும் பொருட்களைத் தவிர அதற்கு இணையான வேறு எந்த வகைப் பொருட்களையும் உரிமம் பெற்றவர் அங்காடியின் மூலம் விற்பனை செய்யவோ அல்லது காட்சிப்படுத்தவோ கூடாது.

20. சில்லரை மீன் விற்பனை அங்காடியினை டாப்கோபெட் இணையமானது, திட்ட ஆய்வு மற்றும் சோதனை செய்திட உரிமையுண்டு.

ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்பட்ட எந்தவொரு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை உரிமம் பெற்றவர் பின்பற்றிடத் தவறினால், இணையமானது, அவருக்கு எதிராக அபராதம் விதித்திடலாம் அல்லது உரிமம் ஒப்பந்தத்தினை ரத்துச் செய்திடலாம் அல்லது இரண்டு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அதிகாரம் பெற்றதாகும்.

21. உரிமம் பெற்றவரின் சில்லரை மீன் விற்பனை அங்காடி தொடர்பான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் குறித்த தாவாக்கள் ஏதேனும் எழுமாயின் 1996 ஆம் ஆண்டு தாவா மற்றும் சமரச சட்டத்தின் கீழான ஷரத்துக்களின்படி பொருள் விளக்கப்பட்டு தீர்வு காணப்படும்.

22. சில்லறை மீன் விற்பனை உரிமம் வழங்கப்பட்டவருக்கும் இணையத்திற்கும் இடையே விற்பனையாளர் மற்றும் வாங்குபவர் என்ற வகையிலான தொடர்பு தவிர வேலை கொடுப்பவர் மற்றும் வேலையட்கள்/பணியாளர்கள் என்ற வகையிலான தொடர்பு ஏதும் கிடையாது எனத் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் லிமிடெட்.

எண்.571, அண்ணாசாலை, ஒருங்கிணைந்த கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை,

நந்தனம், சென்னை–35.

சில்லரை மீன் விற்பனை அங்காடி – உரிமம் பெறுவதற்கான விண்ணப்பம்

விண்ணப்ப படிவம் எண். நாள்: 18.12.2020

கடவுச்சீட்டு அளவிற்குரிய நிழற்படம்

மீன் விற்பனை உரிமத்தின் அடிப்படையில் ------------------------------ மாவட்டத்தில் இணையத்தின் மீன் விற்பனைப் பரிவு கட்டுப்பாட்டின் கீழ் சில்லறை மீன் விற்பனை அங்காடியினை நடத்திட விண்ணப்பித்தல்.

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | |
| 2. | தந்தை / கணவரின் பெயர் | : | |
| 3. | பாலினம் | : | |
| 4. | பிறந்த தேதி | : | |
| 5. | நிரந்தர முகவரி | : | |
| | அடுக்ககம்/தனி வீடு | : | |
| | தெருவின் பெயர்/பகுதியின் பெயர் | : | |
| | நகரத்தின் பெயர் | : | |

| | | | |
|---|---|---|---|
| | அஞ்சல் குறியீட்டு எண் | : | |
| | தொலைபேசி / கைப்பேசி எண் | : | |
| 6. | கடிதத் தொடர்புக்கான அஞ்சல் முகவரி | : | |
| | பெயர் | : | |
| | கதவிலக்கம்/தெருவின் பெயர் | : | |
| | பகுதியின் பெயர் / நகரத்தின் பெயர் | : | |
| | அஞ்சல் குறியீட்டு எண் | : | |
| | தொலைபேசி / கைப்பேசி எண் | : | |
| 7. | கல்வித் தகுதி விவரம் | : | |
| 8. | தற்போதைய தொழில்/வணிகத்தின் விவரம் (தேவையான ஆவணங்களின் நகல்களை இணைத்திட வேண்டும்) | : | |
| 9. | விண்ணப்பதாரரின் நிதியிலைமை விவரம் (விண்ணப்பதாரரின் ஆண்டு விற்ப்னையளவு மற்றும் கருமானவரி கணக்கீட்டுப் பட்டியல்கள் கடந்த மூன்று ஆண்டுகளுக்கானது இணைக்கப்பட வேண்டும். | : | |
| 10. | மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர் விவரம் | : | |
| | உறுப்பினர் எண். | : | |
| | மீனவர் கூட்டுறவு சங்கத்தின் பெயர் | : | |
| 11. | இணைப்புகள் | : | |
| | இருப்பிட ஆவணச் சான்று நகல்/வேலையளிப்போர் விவரம் | : | |
| | அடியிற்குறிப்பிட்டுள்ள ஆவணங்களின் பட்டியலில் கண்டுள்ளவற்றில் ஏதேனும் ஒரு | : | |

| | | | |
|---|---|---|---|
| | ஆவண நகல் (குடும்ப அட்டை / கடவுச்சீட்டு / EPICT / தொழிலாளர் அடையாளச்சான்று /ஆதார் அடையாள அட்டை | | |
| 12. | சில்லறை மீன் விற்பனை அங்காடி அமைத்திட உத்தேசிக்கப்படும் இடத்திற்கான உரிமைதாரர் விவரம். (மேற்குறிப்பிட்ட விவரமானது கட்டிட இருப்பிட வரைபடம், தள திட்டம் ( Site Plan) மற்றும் அவற்றின் புகைப்படங்களுடன் இணைக்கப்படவேண்டும்) | : | |

நாள் :

இடம் :

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

# உறுதிமொழி

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் / எங்களால் அளிக்கப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் எனது / எங்களது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானது மற்றும் சரியானது என உறுதி கூறுகிறேன்/உறுதி கூறுகிறோம். தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தினால் விதிக்கப்படும் அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை முழுமையாக பின்பற்றிடுவோம் எனவும் உறுதி கூறுகிறேன்/உறுதி கூறுகிறோம். எந்தவொரு நாளிலும் அதிகாரமளிக்கப்பட்ட இணையத்தின் அலுவலர் முன்னிலையில் நேரிடையாக ஆஜராகி கூடுதல் விவரங்களைச் சமர்ப்பித்திட சம்மதம் தெரிவிக்கிறேன்/தெரிவிக்கிறோம்.

நாள் :

இடம் :

1. விண்ணப்பதாரரின் கையொப்பம்.

பெயர்:

2. விண்ணப்பதாரரின் கையொப்பம்.

பெயர்:

3. விண்ணப்பதாரரின் கையொப்பம்.

பெயர்: